# திருப்பாடல் ; 103

**ஆண்டவருக்கு அஞ்சுவோர் மீது**
**அவரது பேரன்போ நிலைத்திருக்கும்**

1.. என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
என் முழு உளமே! அவரது திருப்பெயரை ஏத்திடு!
என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே

2.. அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்;
உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்.
அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்;
அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும்
மணிமுடியாகச் சூட்டுகின்றார்.

3.. ஆண்டவரின் செயல்கள் நீதியானவை;
ஒடுக்கப்பட்டோர் அனைவருக்கும் அவர்
உரிமைகளை வழங்குகின்றார்.
அவர் தம் வழிகளை மோசேக்கு வெளிப்படுத்தினார்;
அவர் தம் செயல்களை இஸ்ரயேல் மக்கள் காணும்படி செய்தார்.

4.. ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்;
நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்.
அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை;
நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை.